



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 334 | 27.05.2026 | WEDNESDAY | VAIKASI : 13 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 334 | 27.05.2026 | புதன்கிழமை | வைகாசி : 13 | விலை : ரூ.5/-


## ‘மேகேதாட்டு அணை திட்ட அறிக்கையை நிராகரிக்க அறிவுறுத்துவீர்’

# “பிரதமர் மோடிக்கு முதல்வர் விஜய் கடிதம்..!”

## “சிபிஎஸ்இ 9ம் வகுப்பு மாணவர்களுக்கு 3வது மொழியை கட்டாயமாக்கும் உத்தரவை திரும்பப் பெறுக” : அண்ணாமலை

சென்னை: மே.27-

சி பி எ ஸ் இ ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு, இந்த கல்வியாண்டிலிருந்தே மூன்று மொழிகளைக் கட்டாயமாக்கியுள்ள புதிய அறிவிப்பை மத்திய கல்வி அமைச்சகம் உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், “கடந்த 2026 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், சிபிஎஸ்இ அமைப்பு, மாணவர்களுக்கு ஆறாம் வகுப்பிலிருந்து மூன்று மொழிகள் கட்டாயம் என்றும், அந்த மூன்று மொழிகளில் இரண்டு மொழிகள் இந்திய மொழிகளாக இருக்க வேண்டும் என்றும் அறிவித்தபோது, இந்தியாவின் பலதரப்பட்ட இலக்கிய மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை, சிறுவயதிலேயே குழந்தைகள் அறிந்து கொள்ள உதவும் என்பதால், அந்த முடிவை வரவேற்றவர்களில் நானும் ஒருவன்.

குறிப்பிட்ட 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்ட அறிவிப்பில், ஒன்பதாம் வகுப்பு சிபிஎஸ்இ மாணவர்களுக்கு மூன்றாவது மொழியை கட்டாயமாக்குவது, இன்றிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, 202930 கல்வியாண்டிலிருந்து மட்டுமே அமல்படுத்தப்படும் என்று தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், கடந்த வாரம், மே 15, 2026 அன்று, சிபிஎஸ்இ அனைத்து இணைப்பு பள்ளிகளுக்கும் அனுப்பியுள்ள புதிய சுற்றறிக்கையில், இந்தக் கல்வியாண்டிலிருந்தே ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு மூன்றாவது மொழியை கட்டாயமாக்கியுள்ளது. இதன் மூலம், 202930 கல்வியாண்டிலிருந்து மட்டுமே அமல்படுத்தப்படும் என்ற தனது முந்தைய அறிவிப்பை, சிபிஎஸ்இ அமைப்பு மீறியிருக்கிறது.

சிபிஎஸ்இ அமைப்பின் இந்த திடீர் அறிவிப்பு, பெற்றோர்களுக்கு, குறிப்பாகத் தமிழக மாணவர்களின் பெற்றோர்களுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

ஏனெனில், அவர்களின் குழந்தைகள் ஏற்கனவே ஆறாம் வகுப்பிலேயே தாங்கள் விரும்பிய மொழியைத் தேர்வு செய்துள்ள நிலையில், தற்போது வெளியிடப்பட்டுள்ள புதிய அறிவிப்பின் படி, ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள் மூன்று மொழிகளை கட்டாயமாகக் கற்க வேண்டும் என்றும், அதில் இரண்டு மொழிகள் இந்திய மொழிகளாக இருக்க வேண்டும் என்றும், அது இந்தக் கல்வியாண்டு 2026 ஜூலை 1 முதலே அமலுக்கு வரும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மிகவும் குறுகிய காலத்திற்குள் ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள் மற்றுமொரு புதிய மொழியைக் கற்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது, குழந்தைகளுக்கு தேவையற்ற மனஅழுத்தத்தை ஏற்படுத்தி, அவர்களின் மொத்தக் கல்வித் திறனையும் பாதிக்கும்.

எனவே, இந்த புதிய அறிவிப்பை மத்திய கல்வி அமைச்சகம் உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்றும், ஒன்பதாம் வகுப்பில் மூன்று மொழிகள், அதில் இரண்டு இந்திய மொழிகள் கட்டாயமாக்கப்படும் திட்டத்தை, முன்பே அறிவித்தபடி மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, 202930 கல்வியாண்டிலிருந்து மட்டுமே அமல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்” இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை: மே.27-

கர்நாடக அரசின் மேகேதாட்டு அணை திட்ட அறிக்கையை நிராகரிக்குமாறு மத்திய அமைச்சகம் மற்றும் மத்திய நீர்வள ஆணையத்தில் தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்துமாறு பிரதமர் மோடிக்கு எழுதிய கடிதத்தில் தமிழக முதல்வர் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

மேகேதாட்டு அணை விவகாரம் தொடர்பாக தமிழக முதல்வர் விஜய் நேற்று (மே 26) பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார். அதன் விவரம்: ‘உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையும், காவிரி நடுவர் மன்றத்தின் (CWDT) இறுதி ஆணையையும் அப்பட்டமாக மீறும் வகையில், காவிரி ஆற்றின் குறுக்கே மேகேதாட்டு நீர்த்தேக்கத்துக்கான 'பூமி பூஜை' நடைபெறும் என்று கர்நாடக அரசு அறிவித்துள்ளதை கனிவான கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன்.

கர்நாடக மாநில துணை முதல்வர் இது தொடர்பாக பொது வெளியில் தெரிவித்திருப்பது தங்கள் வாழ்வாதாரத்துக்காக காவிரி ஆற்றையே நம்பியிருக்கும் தமிழ்நாட்டின் லட்சக்கணக்கான விவசாயிகளிடையே மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.

காவிரி நதிநீர் பிரச்சினை என்பது மிகவும் முக்கியமான ஒன்று. இப்பிரச்சினைக்கு சுமார் 30 ஆண்டுகளுக்கு மேல் நீண்ட சட்டப் போராட்டத்துக்குப் பின்னரே தீர்வு காணப்பட்டது என்பது நீங்கள் அறிந்ததே. 16.02.2018 அன்று உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தற்போது அமல்படுத்தப்பட்டு வருகிறது. மேகேதாட்டு திட்டம், காவிரி நடுவர் மன்றம் அனுமதித்த திட்டங்களின் பட்டியலில் இடம்பெறவில்லை. இதனை மேற்கண்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பும் உறுதிப்படுத்தியுள்ளது.

காவிரிப் படுகையானது நீர்ப் பற்றாக்குறை உள்ள படுகை என்பதைக் கருத்தில் கொண்டு, 50 சதவீத




நம்பகத்தன்மை அடிப்படையில் கிடைக்கக்கூடிய நீர் ஏற்கெனவே சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதால் கூடுதல் நீரைப் பயன்படுத்துவதற்கோ அல்லது புதிய பெரிய நீர்த்தேக்கத்தை உருவாக்குவதற்கோ எவ்வித வாய்ப்பும் இல்லை என்பதாலும் 16.02.2018 தேதியிட்ட தீர்ப்பின் மூலம் உச்ச நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட, தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பில் குறிப்பாக அனுமதிக்கப்பட்டுள்ள திட்டங்களைத் தவிர்த்து, காவிரி ஆறு அல்லது அதன் துணை நதிகளின் குறுக்கே வேறு ஏதேனும் புதிய திட்டத்தைத் திட்டமிடுவது, மேற்குறிப்பிட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் தலையிடுவதற்குச் சமமானதாகும்.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் திருத்தப்பட்ட இறுதித் தீர்ப்பின்படி, தமிழ்நாட்டுக்கு உறுதி செய்யப்பட வேண்டிய நீர்வரத்துக்கான மூன்று கூறுகளில் ஒன்றான 'கட்டுப்பாடற்ற நீர்ப்பிடிப்புப் பகுதியிலிருந்து' உருவாகும் நீர்வரத்தைத் தடுப்பதற்கு, கர்நாடக மாநிலம் முயன்று வருவதாகத் தமிழ்நாடு உறுதியாகக் கருதுகிறது.

கர்நாடகா தமிழ்நாடு எல்லையின் மிக அருகிலேயே, 67.16 டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட ஒரு புதிய மேகேதாட்டு திட்டத்தை முன்மொழிவதன் மூலம் கர்நாடக மாநிலம் இம்முயற்சியை மேற்கொள்வதாகத் தமிழ்நாடு கருதுகிறது.

16.02.2018 தேதியிட்ட தனது தீர்ப்பில், நீர்ப்பிடிப்புப் பகுதியின் மேல்பகுதியில் அமைந்துள்ள மாநிலமானது, கீழ்ப்பகுதியில் அமைந்துள்ள மாநிலத்திற்குத் திட்டமிடப்பட்ட நீர் விநியோகத்தைப் பாதிக்கும் வகையிலான எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் அறுதியிட்டுத் தீர்ப்பளித்துள்ளது என்பதால், கர்நாடக மாநிலம் ஒரு புதிய நீர்த்தேக்கத்தைக் கட்டுவதற்கு முன்மொழிந்துள்ள இச்செயலானது, மேற்கூறிய உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் மீதான ஒரு தெளிவான மீறலாகவே அமையும்.

இது தொடர்பாக, கர்நாடக மாநிலம், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு (EIA) ஆய்வை மேற்கொள்வதற்கான ஆய்வு வரையறைகள் (Terms of Reference - ToR) பெற முயன்றபோது, சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் (MoEF & CC) வல்லுநர் மதிப்பீட்டுக் குழுவானது, 19.07.2019 அன்று நடைபெற்ற தனது கூட்டத்தில், இதில் மாநிலங்களுக்கு இடையிலான சிக்கல்கள் உள்ளதைக் கருத்தில் கொண்டு, சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு இடையே ஒரு இணக்கமான தீர்வு எட்டப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்து, அக்கோரிக்கையைத் திருப்பியனுப்பியது என்பதை கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மேலும் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் (MoEF & CC) சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வை மேற்கொள்வதற்கான ஆய்வு வரையறைகளை (ToR) இதுவரை வழங்கக்கூட இல்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, மேகதாது திட்டப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல கர்நாடக மாநிலம் மேற்கொள்ளும் முயற்சி, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மட்டுமல்லாமல், தற்போது நடைமுறையில் உள்ள சுற்றுச்சூழல் சட்டங்களையும் அப்பட்டமாக மீறும் செயலாகும்.

இத்தகைய சூழலில், 16.02.2018 தேதியிட்ட தீர்ப்பை அதன் எழுத்துப்பூர்வ மற்றும் உள்ளார்ந்த உணர்வுகளுக்கு இணங்கச் செயல்படுத்தும் கடமை கொண்ட ஒன்றிய ஜல் சக்தி அமைச்சகமும் (MoJS) மற்றும் மத்திய நீர்வள ஆணையமும் (CWC) தமிழ்நாடு அரசின் கோரிக்கையைப் பரிசீலிக்காமலேயே, கர்நாடகாவின் மேகேதாட்டு திட்ட முன்மொழிவை ஏற்றுப் பரிசீலித்து வருவது வியப்பளிக்கிறது.

இச்சூழலில், மேகேதாட்டு திட்ட முன்மொழிவின் விரிவான திட்ட அறிக்கையானது (DPR), 05.02.2007 தேதியிட்ட காவிரி நடுவர் மன்றத்தின் (CWDT) இறுதி ஆணைக்கும், 16.02.2018 தேதியிட்ட உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கும் முரணாக அமைந்திருப்பதால், அத்திட்ட அறிக்கையை நிராகரிக்குமாறு ஒன்றிய ஜல் சக்தி அமைச்சகம் மற்றும் மத்திய நீர்வள ஆணையம் (CWC) ஆகியவற்றில் தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

படுகையில் அமைந்துள்ள பிற மாநிலங்களின் ஒப்புதலைப் பெறாமல் எந்தவொரு புதிய திட்டத்தையும் மேற்கொள்ளக்கூடாது என்றும், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை எவ்வகையிலும் மீறக் கூடாது என்றும் கர்நாடக அரசுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்” என்று பிரதமர் மோடிக்கு எழுதிய கடிதத்தில் தமிழக முதல்வர் விஜய் குறிப்பிட்டுள்ளார்.

## “மக்கள் என்ன முட்டாள்களா?” “தான் நின்ற கட்சி ஆட்சிக்கு வரலைன்னா ஓடிடுவீங்களா?” எம்எல்ஏ பதவியை வியாபாரப் பொருளாக்கும் திமிர் பிடித்த குதிரை பேர அரசியல்வாதிகள்!

சென்னை, மே.27-

தமிழகத்தில் புதிய அரசியல் மாற்றங்களுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் முதலமைச்சர் ஜோசப் விஜய்ன் அரசுக்கு, தற்போதைய அரசியல் சூழல் மற்றும் கட்சித் தாவல் அவலங்களை முன்வைத்துச் சமூக ஆர்வலர்கள் மற்றும் வாக்களித்த பொதுமக்கள் தரப்பிலிருந்து மிக முக்கியமான ஆலோசனைகளும், எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டு வருகின்றன.

### மக்களை முட்டாளாக்கும் கட்சித் தாவல் பொழப்பு!

இது குறித்து அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ள காரசாரமான விவாதாங்கள் வருமாறு:

"மக்களை என்ன முட்டாள்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்களா இந்த அரசியல்வாதிகள்?. கொள்கையில் சமரசம் செய்து கொண்டால், தொண்டன் என்ன தக்காளித் தொக்கா?. ஒரு குறிப்பிட்ட கட்சியின் கொள்கையையும், சின்னத்தையும் நம்பி மக்கள் தங்களின் விலைமதிப்பற்ற வாக்குகளைப் போட்டு ஒருவரை எம்.எல்.ஏவாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால், தான் நின்ற கட்சி ஆட்சிக்கு வரவில்லை என்றவுடன், சுயநலத்திற்காக உடனடியாகப் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, ஆளும் கட்சி பக்கமோ அல்லது இன்னொரு கட்சி பக்கமோ ஓடிவிடுகிறார்கள். அப்படி ஓடிவிட்டு, மீண்டும் அதே தொகுதியில், வேறொரு புதிய சின்னத்தில் நின்று கொண்டு, எந்தக் கூச்சமும் இல்லாமல் மக்களிடம் மீண்டும் வந்து ஓட்டுக் கேட்கிறார்கள். இதெல்லாம் ஒரு பொழப்பா?

### 15 நாள் தவெக அரசியலும்... மௌனிகளின் நாடகமும் !

இதில் வேடிக்கை என்னவென்றால், கடந்த 15 நாட்களாகத் தமிழக வெற்றிக் கழகத்தின் புதிய அரசியல் வரவையும், ஆட்சிக் கட்டிலையும் பயன்படுத்திக் கொண்டு, தங்களின் சுயநலத்திற்காகத் தாவும் சில அரசியல்வாதிகள், தற்பொழுது எந்தவிதக் குற்ற உணர்ச்சியும் இல்லாமல், "நான் 15 நாளில் ஜெயலலிதாவின் ஆட்சியைப் பார்த்தேன்" என்று வாய் கூசாமல் பேசி வருகிறார்கள். கொள்கைக்காக அன்று ஜெயலலிதா காட்டிய உறுதியில் ஒரு சதவீதத்தைக் கூடத் தங்களின் சுயநலத் தாவலில் காட்டாத இந்த 'மௌனிகள்', தற்பொழுது புதிய கூடாரத்தில் தஞ்சமடைந்து கொண்டு தம்பட்டம் அடிப்பது மக்களை ஏமாற்றும் உச்சக்கட்ட நாடகம் ஆகும்.




### முதலமைச்சர் ஜோசப் விஜய்க்கு எழும் நேரடி கேள்விகள்!

புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள முதலமைச்சர் ஜோசப் விஜய், மக்களின் மனதில் ஓடிக்கொண்டிருக்கும் இந்த எண்ண ஓட்டங்களையும், குமுறல்களையும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். தங்களது கூட்டணிச் சகாக்களுடன் இணைந்து நேர்மையான முறையில் கட்சியை நடத்த அவர் வழிவகை செய்ய வேண்டும்.

பழைய கட்சிகளில் இருந்து சுயநலத்திற்காகத் தற்பொழுது உங்களிடம் ஓடிவரும் எவரையும் அத்தனை எளிதாக நம்பிவிட வேண்டாம். உங்கள் கட்சியில் உள்ளவர்கள் அனைவரும் அரசியலுக்குப் புதியவர்கள் என்பதை மனதில் நிறுத்துங்கள். இல்லையெனில், நாளை உங்களுக்கே இதே நிலைமைதான் ஏற்படும். உங்களது எம்.எல்.ஏக்களும் மிக அழகாக விலை போய்விடுவார்கள்.

மாமா: அங்கதான்டா விஷயமே இருக்கு! இன்னைக்கு உன்னைத் தேடி வர்ற எவனையும் அரசியல்ல அப்படியே நம்பிடக் கூடாது. இன்னைக்கு எடப்பாடியாருக்கு ஆப்பு வச்சுட்டு ஓடி வந்தவங்க, நாளைக்கு தம்பி விஜய்க்கும் அதே வேலையைத்தான் பார்ப்பாங்க. இவங்க கூட இருக்கற எம்.எல்.ஏக்கள் பூராம் புதுசுடா மாப்ளே!

மாப்ளே: அப்படின்னா... நாளைக்கு இவங்களுக்கே இந்த நிலைமை வரும்னு சொல்றீங்களா மாமா?

மாமா: பின்ன என்னடா? சந்தைக்கடை மாடு மாதிரி எம்.எல்.ஏக்களை ரொம்ப அழகா விலை பேசி இழுத்துட்டுப் போயிருவாங்க. 'புதுசா வந்தவங்க'ங்கிற பயமும் விசுவாசமும் ஆரம்பத்துல இருக்கும்... அப்புறம் 'பெட்டிப் பெட்டியா' வர்றப்ப புத்தி மாற ஆரம்பிச்சுடும். இதையெல்லாம் மனசுல வச்சுக்கிட்டு, உஷாரா காய நகர்த்தலைன்னா... சக்கர வியூகத்துல மாட்டுன அபிமன்யு மாதிரி ஆகிடுவாரு தம்பி!

### ஜனநாயகத்தைக் காக்க சட்டங்கள் மாற வேண்டும்!

எனவே, சட்டமன்றத்தில் ஒரு நிலையான ஆட்சி அமைய வேண்டும் என்றால், இதுபோன்ற திமிர் பிடித்த குதிரை பேர அரசியல்வாதிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். இதற்கென்றே கடுமையான சட்டங்கள் இயற்றப்பட்டு, கட்சித் தாவல் தடைச் சட்டம் மேலும் பலப்படுத்தப்பட வேண்டும்" என்று பொதுமக்கள் மற்றும் ஜனநாயக ஆர்வலர்கள் தங்களது குமுறல்களைப் பதிவு செய்து வருகின்றனர்.

தவெகவில் உள்ள புதிய எம்.எல்.ஏக்களைக் குதிரை பேரக் கும்பலிடமிருந்து பாதுகாப்பதும், கூட்டணிக் கட்சிகளை அரவணைத்துச் சமூக நீதியைக் காப்பதும் தான் முதலமைச்சர் விஜய்யின் முன் உள்ள ஆகப்பெரிய சவால் என அரசியல் அனுபவம் வாய்ந்தவர்களின் முக்கிய வாய்ஸ்.

# ”சட்ட விதிகளுக்கு உட்பட்டே நடவடிக்கை” எம்எல்ஏக்கள் ராஜினாமா ஏற்பு தொடர்பாக சபாநாயகர் விளக்கம்



சென்னை, மே.27-

சட்ட விதிகளுக்கு உட்பட்டே அதிமுக எம்எல்ஏக்கள் ராஜினாமா கடிதங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாக சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களை கைப்பற்றிய விஜய்யின் தவெக, காங்கிரஸ், விசிக, கம்யூனிஸ்ட், ஐயூஎம்எல் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைத்துள்ளது. இதனிடையே, ஆட்சியை தக்க வைக்க நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில், அதிமுக சாரில் சி.வி.சண்முகம், எஸ்.பி.வேலுமணி, சி.விஜயபாஸ்கர் தரப்பில் 25 எம். எல்.ஏக்கள் தவெக அரசுக்கு ஆதரவு அளிப்பதாக கூறியதால், அதிமுக கட்சிக்குள் பிளவு ஏற்பட்டது.

கட்சி தலைமையின் விதிகளை மீறிய 25 எம்எல்ஏக்களையும் தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி தரப்பில் சபாநாயரிடம் கோரிக்கை மனு வழங்கப்பட்டது. இதில், சிலர் மீண்டும் எடப்பாடி பழனிசாமியை நேரில் சந்தித்து இபிஎஸ் அணியில் தங்களை இணைத்துக்கொண்டனர். இதனால் சி.வி.சண்முகம் தரப்பு குழுவில் சலசலப்பு ஏற்பட்டது.

இந்நிலையில், நேற்று சி.வி.சண்முகம் தரப்பில் தவெக அரசுக்கு ஆதரவு அளித்த மூன்று அதிமுக எம்எல்ஏக்கள் தங்கள் எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தனர். அவர்களின் ராஜினாமா கடிதம் உடனடியாக ஏற்கப்பட்டு மூவரும் தவெகவில் இணைந்தனர். மேலும் ஒரு அதிமுக எம்எல்ஏ தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த எடப்பாடி பழனிசாமி தரப்பினர், ராஜினாமா கடிதங்களை ஏற்கக் கூடாது என்று சபாநாயகரிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இதனிடையே சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர், ”சட்ட விதிகளுக்கு உட்பட்டே அதிமுக எம்எல்ஏக்களின் ராஜினாமா கடிதம் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முழுக்க முழுக்க சபாநாயகரின் சட்ட விதிகளின்படியே நடவடிக்கை எடுத்தேன்.

எடப்பாடி பழனிசாமி தரப்பினர் வழங்கிய மனு மீது முறையாக நடவடிக்கை எடுக்க சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளதே தவிர மனுவை ஒதுக்கவில்லை. தவெக அரசுக்கு ஆதரவு கூடுகிறதா குறைகிறதா என்பதை கவனிப்பது எனது வேலை அல்ல, எனது வேலை எண்ணிக்கையை சரி பார்ப்பது மட்டுமே.” என்று கூறினார்.

# த.வெ.க., அரசின் விவசாய கூட்டுறவு கடன் தள்ளுபடி அறிவிப்பு அநீதியானது, ஏமாற்றமளிக்கிறது எஸ்டிபிஐ விமர்சனம்




சென்னை, மே.27-

தவெக அரசு நேற்று முன் தினம் அறிவித்த விவசாய கூட்டுறவு கடன் தள்ளுபடி அறிவிப்பு ஏமாற்றமளிப்பதாக எஸ்டிபிஐ கட்சி விமர்சித்து உள்ளது. மேலும் தேர்தலின் போது அளித்தவாக்குறுதிப்படி அனைத்து விவசாயிகளின் கடன்களையும் நிபந்தனையின்றி முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கேட்டுகொண்டுள்ளது.

இதுதொடர்பாக எஸ்டிபிஐ கட்சியின் மாநில தலைவர் முகம்மது முபாரக் வெளியிட்டுள்ள அறிக்கையில் , தேர்தல் வாக்குறுதியில் விவசாயிகளின் கூட்டுறவு வங்கிக் கடன் முழுமையாக ரத்து செய்யப்படும் என அறிவித்துவிட்டு, தற்போது விவசாயிகளைத் தரம் பிரித்து, விகிதாச்சார அடிப்படையில் கடன் தள்ளுபடி செய்திருப்பது ஒட்டுமொத்த விவசாயிகளையும் ஏமாற்றும் செயலாகும் என்று காட்டமாக கூறப்பட்டு உள்ளது.

ரூ.50 ஆயிரம் வரை கடன் பெற்ற குறு விவசாயிகளுக்கு மட்டுமே முழுமையான தள்ளுபடி, அதற்கு மேல் கடன் பெற்றவர்களுக்கு விகிதாச்சார முறை என அறிவித்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இந்த அறிவிப்பைத் தமிழக முதல்வர் உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும். தமிழக வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் விவசாயிகளைச் சிறு, குறு, பெரு விவசாயிகள் எனத் தரம் பிரிப்பது அநீதியானது. அனைத்து விவசாயிகளும் ஒரே மாதிரியான உற்பத்திச் செலவைத்தான் எதிர்கொள்கின்றனர். எனவே, நிலத்தின் ஏக்கர் கணக்கில் பிரிப்பதற்குப் பதிலாக, அவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தின் அடிப்படையில் கணக்கிட்டுத் தள்ளுபடி வழங்க வேண்டும்.

மேலும், தற்போதைய அறிவிப்பால் 2 ஏக்கருக்கு மேல் நெல் பயிரிட்டவர்களும்; கரும்பு, வாழை, மஞ்சள் போன்ற தோட்டப் பயிர்களைச் சாகுபடி செய்த விவசாயிகளும் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். கடன் தள்ளுபடிக்கான கால வரம்பை 2025 மே என்று சுருக்காமல், 2024 ஆம் ஆண்டிலிருந்தே கணக்கிட்டு நீட்டிக்க வேண்டும். கூட்டுறவு கடன் முழுமையாக ரத்து செய்யப்படும் என்ற தவெகவின் வாக்குறுதியை நம்பி வாக்களித்த விவசாயிகளுக்கு, இந்த அறிவிப்பின் மூலம் தற்போதைய அரசு 'அல்வா' கொடுத்து ஏமாற்றியுள்ளது. இதனால் தவெக அரசுக்கு வாக்களித்த விவசாய பெருங்குடி மக்களும், விவசாய அமைப்புகளும் பெரும் கொந்தளிப்பில் உள்ளனர். எனவே, தமிழக முதல்வர் இந்த அறிவிப்பை உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும். கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் பெற்ற அனைத்து விவசாயிகளின் ஒட்டுமொத்த கடன் தொகையையும் எவ்வித நிபந்தனையுமின்றி முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும் என வலியுறுத்தி கேட்டு கொள்வதாக கூறி இருக்கிறார்.



# பக்ரீத் பண்டிகை, கோயில் திருவிழாக்களை முன்னிட்டு திருப்புவனத்தில் ரூ.3 கோடிக்கு ஆடு விற்பனை

திருப்புவனம், மே.27-

சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை கால்நடை சந்தை நடைபெறும். இதில், சுற்றுப்புற கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் தாங்கள் வளர்க்கும் ஆடு, மாடு, கோழிகளை கொண்டு வந்து விற்பனை செய்வர். திருப்புவனம் ஆட்டுச் சந்தை தென்மாவட்டங்களில் பிரசித்தி பெற்றது. திருவிழாக் காலங்களில் விற்பனை களைகட்டும். இங்கு வழக்கமாக ஆடுகள் கிலோ ரூ.800லிருந்து 900 வரை விற்பனையாகும்.

இந்த நிலையில் நாளை மறுதினம் பக்ரீத் பண்டிகை கொண்டாடப்பட உள்ளது. மேலும், சுற்றுப்புற கிராமக் கோயில்களில் வைகாசி திருவிழா நடந்து வருகிறது. இதனால், இன்று திருப்புவனத்தில் கூடிய சந்தையில் விவசாயிகள், வியாபாரிகள் அதிகாலையிலேயே குவிந்தனர். வெள்ளாடு மற்றும் செம்மறியாடு கிலோ ரூ.1000 வரை விற்பனையானது. சந்தைக்கு 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆடுகள் விற்பனைக்கு வந்தன. வியாபாரிகள் போட்டி போட்டு ஆடுகளை வாங்கி வாகனங்களில் ஏற்றிச் சென்றனர்.

இது குறித்து வியாபாரிகள் கூறுகையில், ‘பக்ரீத் பண்டிகை, சுற்றுப்புற கிராமங்களில் கோயில் திருவிழாவால் ஆடு விற்பனை இன்று களைகட்டியது. விலை உயர்ந்த போதிலும் சுமார் ரூ.3 கோடிக்கு ஆடுகள் விற்பனையாகின’ என்றனர்.

# “அ.தி.மு.க., எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா செய்து த.வெ.க.,வில் இணைவது ஏற்புடையதல்ல” பெ.சண்முகம்



சென்னை, மே.27-

திமுக எம்.எல்.ஏக்கள் ராஜினாமா செய்து தவெகவில் இணைவது ஆரோக்கியமான அரசியலுக்கு ஏற்பு டையதல்ல என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூலம் சட்டப் பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்ற சில சட்டப்பேரவை உறுப்பினர்கள் திடீரென்று ராஜினாமா செய்திருப்பதும், உடனடியாக அவர்கள் அனைவரும் தமிழக வெற்றிக் கழகத்தில் சேர்ந்திருப்பதும் தமிழ்நாட்டில் விவாதப் பொருளாக மாறியிருக்கிறது.

தேர்தலுக்குப் பின்னர் அதிமுகவில் அடுக்கடுக்கான குழப்பமும், கோஷ்டி மோதலும் ஏற்பட்டு ராஜினாமா என்ற நிலைக்கு வந்துள்ளது.

ராஜினாமா செய்த எம்.எல்.ஏ.க்கள் தவெகவில் சேர்ந்திருப்பது அவர்கள் விரும்பி மேற்கொண்ட முடிவு என்று சொன்னாலும், எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராமல் இயல்பாக நடந்த செயலாக கருத இயலவில்லை. இத்தகைய போக்கு ஆரோக்கியமான அரசியலுக்கு ஏற்றது அல்ல என்பதை சுட்டிக்காட்டுகிறோம்.

ஏற்கெனவே, சட்டப்பேரவையில் தவெக ஆட்சிக்கு ஆதரவாக வாக்களித்ததன் மூலம் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு அவர்கள் உள்ளாகி இருக்கிறார்கள். இருப்பினும் உடனடியாக அவர்களை தவெகவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் அதை தவெக ஊக்குவிப்பதாகவே கருத வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே, இந்தப் போக்கு ஆரோக்கியமான அரசியலுக்கு ஏற்புடையதல்ல என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயற்குழு சுட்டிக்காட்டுகிறது’ எனத் தெரிவித்துள்ளார்.

# பள்ளி திறப்பை தள்ளி வைக்க முன்னாள் அமைச்சர் வலியுறுத்தல்

சென்னை, மே.27-

மாணவர்களின் உடல் நலனைப் பாதுகாக்கும் வகையில், பள்ளிகள் திறப்பு தேதியை தள்ளிவைக்க வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில்: முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆட்சியின் போது கோடை வெயிலைக் கருத்தில்கொண்டும் பெற்றோர்கள் மற்றும் கல்வியாளர்களின் கோரிக்கையை ஏற்றும் பள்ளிகள் திறப்பு தள்ளி வைக்கப்பட்டது என்றும் இம்முறையை தற்போதைய அரசும் தொடர வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் கூறியுள்ளார். வெயிலின் தாக்கம் குறையும் வரையில், வகுப்புகளைத் தொடங்கக் கூடாது என வலியுறுத்தியுள்ளார். மாணவர்களின் நலன் மிக முக்கியம் என்று அவர் தெரிவித்துள்ளார்.



# “திராவிட மாடல் 2.0 ஆட்சியாகவே த.வெ.க., ஆட்சி உள்ளது” அர்ஜுன் சம்பத் விமர்சனம்



திருவாரூர், மே.27-

திராவிட மாடல் 2.0 ஆட்சியாகவே தவெகவின் ஆட்சி உள்ளது என இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத் தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் கூறியது: தமிழக முதல்வராக விஜய் பொறுப்பேற்ற 15 நாட்களில் 40க்கும் மேற்பட்ட படுகொலை சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

திமுக ஆட்சியில் என்னவெல்லாம் நடந்ததோ, அவை தவெக ஆட்சியிலும் தொடர்கின்றன. பாட்டிலுக்கு பத்து ரூபாய் கூடுதலாக வாங்குவதை நிறுத்த முடியவில்லை. போதைப் பொருளை ஒழிக்க முடியவில்லை.

தமிழகத்தில் நிகழும் குற்றங்கள் அனைத்துக்கும் போதை ஆசாமிகள்தான் காரணமாக உள்ளனர். மதுக் கடைகளின் எண்ணிக்கையை குறைப்பதால் எந்தப் பலனும் இல்லை. அனைத்து டாஸ்மாக் கடைகளையும் மூட வேண்டும்.

முதல்வர் விஜய் இன்னொரு மு.க.ஸ்டாலி னாக மாறிவிடக் கூடாது. திராவிட மாடல் 2.0 ஆட்சியாகதான் தவெகவினுடைய ஆட்சி உள்ளது. இந்த நிலைமை தொடரக்கூடாது.

தமிழகத்தில் திமுக ஆட்சி வந்தவுடன் மின்தடை ஏற்பட்டதைப்போல, தவெக ஆட்சி வந்த உடனும் மின்தடை ஏற்பட்டு வருகிறது. சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள போர்ச்சூழல் காரணமாக பெட்ரோல், டீசல் விலை உயர்ந்துள்ளது. அதை கட்டுக்குள் கொண்டுவர பிரதமர் முயற்சித்து வருகிறார். இவ்வாறு அவர் கூறினார்.

# அரசு மருத்துவமனையில் இறந்தவர் உடலை எலி கடித்துக்குதறியதால் உறவினர்கள் அதிர்ச்சி!

திருவாரூர், மே.27-

திருவாரூரை சேர்ந்த கோவிந்தராஜ்(55) என்பவர் உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று மாலை அவர் உயிரிழந்துள்ளார். பின்னர் மருத்துவமனை விதிப்படி அவரது உடல் பிணவறைக்கு கொண்டு செல்லப்பட்டது. மருத்துவமனை நடைமுறைகளை முடித்துவிட்டு இன்று உடலை பெற இறந்தவரின் உறவினர்கள் பிணவறைக்கு சென்றுள்ளார்.

இந்நிலையில் திருவாரூர் அரசு மருத்துக்கல்லூரி மருத்துவமனையில் இறந்த கோவிந்தராஜின் உடலை எலி கடித்துக்குதறியதால் உறவினர்கள் அதிர்ச்சி அடைந்திருக்கிறார்கள்.பிணவறையில் வைக்கப்பட்டிருந்த கோவிந்தராஜ் என்பவரின் உடலில் பல இடங்களில் எலி கடித்துக்குதறிய அடையாளம் இருந்ததாகவும், அவருடைய எலும்புகள் வெளியே தெரியும் வகையில் இருந்ததாகவும். முகம் தலை ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டிருக்கிறது என்று அவரின் உறவினர்கள் புகாரளித்துள்ளனர். இது குறித்து மருத்துவமனை நிர்வாகத்திடம் கேட்டபோது அவர்கள் முறையாக விளக்கம் அளிக்கவில்லை. எனவே இறந்தவரின் உறவினர்கள் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். பின்னர் திருவாரூர் மருத்துவக்கல்லூரி முதல்வர், நிர்வாகிகள் மற்றும் போலீசார் உறவினர்களிடையே சமாதான பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# பெரம்பலூர் அருகே தி.மு.க., வி.சி.க.,வினர் இடையே பயங்கர மோதல்

## கல் மற்றும் கட்டையால் தாக்கிக் கொண்டதால் பதற்றம்!



பெரம்பலூர், மே.27-

குன்னம் தொகுதி எம்எல்ஏ எஸ்.எஸ். சிவசங்கரின் நன்றி தெரிவிக்கும் நிகழ்வுக்குச் சென்ற திமுகவினரை, குன்னம் பேருந்து நிலையம் அருகே விசிகவினர் வழிமறித்துத் தாக்கியதால் மோதல் ஏற்பட்டது. ஒருவரை ஒருவர், கல் மற்றும் கட்டையால் தாக்கி கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் சட்டபேரவை தொகுதி எம்எல்ஏவாக பொறுப்பு வகித்து வருபவர் எஸ்.எஸ். சிவசங்கர். முன்னாள் அமைச்சரான சிவசங்கர் கடந்த சில நாட்களாக குன்னம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மக்களை சந்தித்து நன்றி தெரிவித்து வருகிறார். அதன்படி இன்று 6வது கட்டமாக மேலமாத்தூர் உள்பட பல்வேறு இடங்களில் பொதுமக்களை சந்தித்து நன்றி கூறினார்.

இந் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக பெரம்பலூரை சேர்ந்த திமுகவினர் குன்னத்திற்கு காரில் சென்று கொண்டிருந்தனர். அப்போது குன்னம் பேருந்து நிலையம் அருகே காத்திருந்த குன்னம் தொகுதி விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட பொறுப்பாளர் வரதராஜன் தலைமையிலானவர்கள், திமுகவினர் வந்த காரை வழிமறித்து தகராறில் ஈடுபட்டனர். இதனால் இரு தரப்பினர் இடையே மோதல் ஏற்பட்டது.

ஒருவரை ஒருவர், கல் மற்றும் கட்டையால் தாக்கி கொண்டனர். சுமார் 30 நிமிடம் இந்த மோதல் நீடித்தது. இம்மோதலால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. இதுகுறித்து தகவல் அறிந்து வந்த குன்னம் போலீஸார் இருதரப்பினர் இடையே சமாதான பேச்சுவார்த்தை நடத்தினர். இதையடுத்து அவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். இதற்கிடையில் மோதல் குறித்து தகவல் அறிந்ததும் மாவட்ட எஸ்பி லலித்குமார் சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வு செய்தார்.

விசாரணையில் முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா, விசிகவை விமர்சனம் செய்தது தொடர்பாக, குன்னம் தொகுதி விசிகவினர், கோபம் அடைந்து, திமுகவினர் மீது தாக்குதல் நடத்தியது தெரியவந்தது. இத்தாக்குதலில் திமுகவினர்தான் அதிகளவு பாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதுகுறித்து போலீஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# த.வெ.க., ஆட்சியில் தீர்க்கப்படுமா நெல் கொள்முதல் நிலைய பிரச்சினைகள்?



மதுரை, மே.27-

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் விவ சாயிகளிடம் இருந்து இடைத் தரகர்களை தவிர்த்து, குறைந்தபட்ச ஆதரவு விலையில் அரசே நேரடியாக நெல் கொள்முதல் செய்வதற்காக நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு கொள்முதல் செய்யப்படும் நெல் ஒரு மூட்டைக்கு (40.580 கிலோ) ஆதரவு விலை தற்போது ஏ கிரேடு ரக நெல் குவின்டாலுக்கு ரூ.2,545, பொது ரக நெல் குவின்டாலுக்கு ரூ.2,500 நிர்ணயித்துள்ளது.

கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளுக்கான தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டு வருகிறது. குறுவை (அக்டோபர் டிசம்பர்), சம்பா (ஜனவரி ஜூலை) ஆகிய அறுவடை பருவங்களில் இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன.

விவசாயிகள் தங்கள் நெல்லை விற்பனை செய்ய, அருகில் உள்ள நேரடி கொள்முதல் நிலையத்தை அணுகலாம் அல்லது முன்பதிவு மற்றும் விவரங்களை அறிய மின்னணு நேரடி கொள்முதல் மையத்தின் www.tncsc-edpc.tn.gov.in என்ற வலைதளத்தைப் பார்வையிடலாம்.

மதுரை மாவட்டத்தில் சுமார் 48 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு விவசாயிகளிடம் நெல் கொள் முதல் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், நெல் எடை போட மூட்டை ஒன்றுக்கு ரூ.60 வரை கட்டாயமாக வசூலிக்கப்படுகிறது.

மேலும், மூட்டைக்கு 2 கிலோ வரை கூடுதலாக எடை பிடிக்கப்படுவதாகவும் விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர். இது குறித்து விவசாயி அய்யாக்கண்ணு கூறுகையில், நேரடி கொள்முதல் நிலையங்களில் வெயில் காலத்தில் விவசாயிகள் தங்கள் நெல்லை உலர வைத்துக்கொண்டு வந்து கொடுக்கின்றனர்.

ஆனால், மழைக் காலத்தில் நெல்லை உலரவைக்க முடியாமல் சிரமப்படுகின்றனர். இக்கால கட்டங்களில் நெல்லின் ஈரப்பத அளவை 17 சதவீதத்தில் இருந்து 22 சதவீதமாக உயர்த்தினால் வசதியாக இருக்கும்.

இதற்கு, அரசு நெல் உலர வைக்கும் இயந்திரங்களை கையாண்டால் இந்த பிரச்சினை இருக்காது. நெல் மூட்டை எடை போட கூலி யாக மூட்டை ஒன்றுக்கு ரூ. 10 வழங்குகிறது.

இந்த கூலி போதுமானதாக இல்லாத காரணத் தால் அவர்கள் விவசாயி களிடம் கூடுதல் தொகை ரூ.60 வரை வசூலிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இதை அரசு கருத்தில் கொண்டு, நெல் மூட்டை எடை போடும் தொழி லாளிக்கு மூட்டை ஒன்றுக்கு ரூ.50 வழங்கினால், விவசாயிகளிடம் கூடுதல் தொகை வசூலிப்பது தடுக்கப்படும்.

சில நேரங்களில் நெல் கொள் முதல் செய்யப்பட்டு 50 நாட்களுக்கு மேலாகியும் விவசாயி களின் வங்கிக் கணக்குகளுக்கு பணம் வராததால், அடுத்தடுத்த விவசாயப் பணிகளுக்கு நிதி நெருக்கடி ஏற்படுகிறது. இதையெல்லாம் புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசு கவனத்தில் கொண்டு விவசாயிகளின் நலனை பாது காக்க வேண்டும் என அவர் கூறினார்.

# வேலூரில் செங்கல் சூளை உரிமையாளர்களிடம் மாமூல் கேட்ட விஜயகுமார் த.வெ.க.,வில் இருந்து நீக்கம்!




ராணிப்பேட்டை, மே.27-

ராணிப்பேட்டை மாவட்டத்தில் செங்கல் சூளை உரிமை யாளர்களிடம் தவெக ஒன்றிய செயலாளர் விஜயகுமார் ரூ.1 லட்சம் மாமூல் கேட்டார். மாமூல் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் செங்கல்சூளைகளை இழுத்து மூடுவோம் என்று மிரட்டினார். இதுதொடர்பான வீடியோக்கள் வெளியாகி பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்நிலையில் தான் விஜயகுமாரிடம் இருந்து பதவியை பறித்து கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்பட அனைத்து பொறுப்புகளில் இருந்து முதல்வர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் அதிரடியாக நீக்கியுள்ளது.

சட்டசபை தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் வென்று ஆட்சியை பிடித்துவிட்டது. விஜய் முதல்வரானது முதல் தவெகவினர் ஆங்காங்கே அட்டூழியம் செய்து வருகின்றனர். மருத்துவமனைகள், அரசு அலுவலகங்களில் தவெக நிர்வாகிகள் ஆய்வு மேற்கொண்டு அதிகாரிகளிடம் கேள்வி கேட்பது உள்ளிட்ட செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வரிசையில் தான் ராணிப்பேட்டை மாவட்டத்தில் தவெக நிர்வாகி செய்த செயல் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அதாவது ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு சட்டசபை தொகுதிக்கு ஊட்டப்பட்ட கணியம்பாடி ஒன்றியத்தின் தவெக செயலாளராக விஜயகுமார் இருந்தார். இவர் தனது ஆதரவாளர்களுடன் சென்று கணியம்பாடி புதூரில் இயங்கி வரும் சண்முகம், தினகரன், சுனில்குமார், ரமேஷ், சுமன் ஆகியோரின் செங்கல்சூளைகளில் புகுந்து மாதம் ரூ. 1 லட்சம் கொடுக்காவிட்டால் சூளைகளை இழுத்து மூடுவோம் என மாமூல் கேட்டு மிரட்டினார். செய்திமடல் சந்தா

இதனால் இருதரப்புக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. போலீசார் சென்று சமாதானம் செய்தனர். இதுதொடர்பான வீடியோக்கள் வெளியாகி சமூக வலைதளங்களில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. செங்கல்சூளை உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் தாலுகா போலீசாரிடம் புகார் மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால், கணியம்பாடி பஸ் நிறுத்தம் அருகே வேலூர் மற்றும் திருவண்ணாமலை பிரதான சாலையில் சாலை மறியல் நடந்தது. தவெக நிர்வாகி மீது வழக்குப்பதிவு செய்யவும், கட்சியில் இருந்து நீக்க வேண்டும் என்றும் அவர்கள் வலிறுத்தினர்.

இந்நிலையில் தான் கணியம்பாடி தவெக ஒன்றிய செயலாளர் விஜயகுமார் தவெகவின் பொறுப்பு அதிரடியாக பறிக்கப்பட்டுள்ளது. அதேபோல், கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக தமிழக வெற்றிக் கழகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில்;

"ராணிப்பேட்டை மேற்கு மாவட்டம் ஆற்காடு சட்டசமன்ற தொகுதிக்கு உட்பட்ட கணியம்பாடி கிழக்கு ஒன்றிய செயலாளராக பதவி வகித்து வந்த டி விஜயகுமார் கட்சியின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் செயல்பட்டார்.

இதனால் அவர் வகித்து வந்த ஒன்றிய செயலாளர் மற்றும் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் இன்று முதல் விடுவிக்கப்படுகிறார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# "விவசாயிகளுக்கு விஜய் செய்தது அப்பட்டமான நம்பிக்கை துரோகம்" நயினார் நாகேந்திரன்



சென்னை, மே.27-

"ஆட்சிக்கு வந்தால் 5 ஏக்கர் நிலத்திற்கும் குறைவாக வைத்திருக்கும் அனைத்து விவசாயிகளுக்கும் 100% பயிர்க்கடன் ரத்து என்று கூறிவிட்டு, தற்போது வெறும் ₹50,000 பயிர்க்கடன் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு மட்டுமே 100% கடன் தள்ளுபடி செய்துள்ளீர்களே, இது அப்பட்டமான நம்பிக்கை துரோகமில்லையா?" என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "விவசாயிகளை நம்ப வைத்து ஏமாற்றியவர் ஜோசப் விஜய். ஆட்சிக்கு வந்தால் 5 ஏக்கர் நிலத்திற்கும் குறைவாக வைத்திருக்கும் அனைத்து விவசாயிகளுக்கும் 100% பயிர்க்கடன் ரத்து என்று கூறிவிட்டு, தற்போது வெறும் ₹50,000 பயிர்க்கடன் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு மட்டுமே 100% கடன் தள்ளுபடி செய்துள்ளீர்களே, இது அப்பட்டமான நம்பிக்கை துரோகமில்லையா?. இதேபோலத் தான் தேர்தலின் போது அனைவருக்கும் 200 யூனிட் மின்சாரம் இலவசம் என்று கூறிவிட்டு, ஆட்சிக்கு வந்தவுடன் 500 யூனிட்டிற்கு கீழ் உபயோகித்தால் மட்டுமே என "இக்" வைத்தீர்கள்.

எதற்கு இத்தனை பித்தலாட்டங்கள்? இத்தனை பொய் வாக்குறுதிகள்? ஆசை காட்டி அப்பாவி மக்களை ஏமாற்றுமளவிற்கு முதல்வர் பதவி மீது உங்களுக்கு அப்படியென்ன வெறி?. காற்றில் கோட்டை கட்டுவது போல, நீங்கள் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளில் 99% நிறைவேற்றவே முடியாத வெறும் வாய் வார்த்தைகள் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்? இதுதான் உங்கள் மாற்று அரசியலின் லட்சணமா?

தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதியின் படி, 5 ஏக்கருக்குள் நிலம் வைத்திருக்கும் விவசாயிகளின் அனைத்து பயிர்க்கடன்களையும் தவெக அரசு தள்ளுபடி செய்ய வேண்டும். இல்லையேல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுடன் இணைந்து தமிழக பாஜக மக்கள் போராட்டங்களை முன்னெடுக்கும்" எனத் தெரிவித்துள்ளார்.

# தென்காசி அருகே விவசாயி தற்கொலை விவகாரத்தில் காவல் ஆய்வாளர் உட்பட 3 பேர் பணியிடை நீக்கம்




தென்காசி, மே.27-

தென்காசி மாவட்டம் சிவகிரி தாலுகா பகுதியை சேர்ந்தவர் விவசாயி அந்தோணி ராஜ். இவர் கடந்த சில தினங்களுக்கு முன்பு தென்காசி சிவகிரி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்த போது, புகாரினை பெற்றுக்கொள்ளாமல் காவலர்கள் அவரை மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். இதனால் அவர் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

விஷம் அருந்திய நிலையில் உயிருக்கு ஆபத்தான சூழலில் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 2 நாட்களில் உயிரிழந்தார். இறந்தவரின் மகன் இசக்கி அளித்த புகாரின் பேரில் சம்பவத்தில் சம்மந்தப்பட்ட காவல் ஆய்வாளர் முரளிதரன், காவல்நிலைய எழுத்தாளர் கனகராஜ், காவலர் முத்துக்கண்ணன் ஆகிய காவலர்களின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

தற்கொலைக்கு தூண்டியதாக நேற்று முன்தினம் காவல் ஆய்வாளர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்ட நிலையில் நேற்று அவர்கள் மூவரையும் பணியிடை நீக்கம் செய்ய நெல்லை சரக டிஐஜி உத்தரவிட்டுள்ளார்.



■ மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் தர்மசாஸ்தா ஆலயத்தில் ரிஷப ராசியில் இருந்து மிதுன ராசியில் இருந்து கடகராசிக்கு குரு பெயர்ச்சியாவதை முன்னிட்டு நேற்று காலை. அங்கு அமைந்துள்ள கல்யாண நவக்கிரக ஸ்ரீ குரு பகவானுக்கும், ஸ்ரீ அஷ்டமா சித்தி தட்சிணாமூர்த்திக்கும் யாக பூஜைகள் நடைபெற்றது. தொடர்ந்து பால், சந்தனம், விபூதி, தயிர் உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்கள், அலங்காரங்கள், தீபாராதனைகள் நடைபெற்றது. இதில் சுற்று வட்டாரங்களை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகி ஏ.எல். சீனிவாசன் மற்றும் ஐயப்ப ,முருக பக்தர்கள் செய்திருந்தனர்.

# ராயபுரம் உள்ளிட்ட 3 மண்டலங்களில் ரூ.303 கோடியில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணிகள்: மாநகராட்சி ஆணையர் சமீரன் ஆய்வு



**சென்னை, மே.27–**

மாநகராட்சி சார்பில் தண்டையார்பேட்டை, திருவிக நகர் மற்றும் ராயபுரம் மண்டலங்களில் ரூ.303 கோடியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப் பணிகளை ஆணையர் ஜி.எஸ். சமீரன் நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

சென்னை மாநகராட்சி சார்பில், பெரம்பூர் தொகுதியில், தண்டையார்பேட்டை மண்டலம், எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை அருகில் ரூ.3 கோடியில் முதல்வரின் சிறு விளையாட்டு அரங்கம் கட்டப்பட உள்ளது.

அதன் வரைபடம் மற்றும் முதற்கட்ட பணிகளை மாநகராட்சி ஆணையர் ஜி.எஸ்.சமீரன் நேற்று ஆய்வு செய்து, கூடைப்பந்து, கிரிக்கெட் வலைப்பயிற்சி, கால்பந்து உள்ளிட்ட மைதானங்களை அமைப்பது தொடர்பாக அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

வியாசர்பாடி கால்வாயில் மாநகராட்சி மூலதன நிதியில் ரூ.3 கோடியில் மேற்கொள்ளப்பட்டு வரும் தடுப்புச் சுவரை உயர்த்திக் கட்டும் பணி மற்றும் தூர் வாரும் பணியை ஆய்வு செய்தார்.

தொடர்ந்து முல்லை நகர் பகுதியில் கேப்டன் காட்டன் கால்வாயில் ரூ.9.20 கோடியில் வெள்ளத் தடுப்புச் சுவர் புதிதாக கட்டப்படவுள்ள இடத்தை பார்வையிட்டு, விரைந்து பணிகளைத் தொடங்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து முல்லை நகர் மேம்பாலம், மயானபூமி, கூட்ஸ் ஷெட் சாலை வடக்கு ஆகிய பகுதிகளில் பருவமழைக் காலங்களில் மழைநீர் தேங்காமல் இருக்கும் விதமாக, மாநகராட்சி மூலதன நிதியில் ரூ.3.06 கோடியில் மொத்தம் 9,44,600 லிட்டர் கொள்ளளவு கொண்ட 3 நீர்த்தேக்கத் தொட்டிகள், 400 குதிரைத் திறன் கொண்ட மோட்டார் பம்புகள் அமைக்கும் பணிகளை ஆய்வு செய்து, அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

பின்னர் 45வது வார்டுக்கு உட்பட்ட ஸ்டீபன்சன் சாலை, கணேசபுரம் சாலை, சுந்தரம் நகர் பிரதான சாலைகளின் வழியாககூட்ஸ் ஷெட் குளத்தில் இணைக்கும் வகையில் ரூ.13.32 கோடியில் கட்டப்பட்டு வரும் மழைநீர்வடிகால் பணியையும், கணேசபுரம் சுரங்கப் பாதையின் மேல் ரூ.226.55 கோடியில் கட்டப்பட்டு வரும் உயர்மட்ட மேம்பாலப் பணியையும் பார்வையிட்டார்.

திருவிகநகர் மண்டலம், டாக்டர் அம்பேத்கர் கல்லூரி சாலையில் ரூ.45 கோடியில் கட்டப்பட்டு வரும் நவீன இறைச்சிக்கூட கட்டிடப் பணியையும் பார்வையிட்டார்.

பின்னர், ராயபுரம் மண்டலத்துக்கு உட்பட்ட பேசின் மேம்பாலம் அருகில் உள்ள நவீன மாடுகள் காப்பகத்தைப் பார்வையிட்டு சாலையில் சுற்றித்திரியும் மாடுகளைக் காப்பகத்தில் பராமரிக்கவும், கால்நடைகள் வளர்ப்போருக்கு போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அறிவுறுத்தினார். இந்த ஆய்வுகளின் போது, வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# வைகாசி விசாகத் திருவிழாவை முன்னிட்டு மே 30ல் திருச்செந்தூர் நெல்லை இடையே ரயில் சேவை!



திருசெந்தூர், மே.27-

வைகாசி விசாகத் திருவிழாவை முன்னிட்டு மே 30ல் திருச்செந்தூர்நெல்லை இடையே சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. பக்தர்களின் வசதிக்காக முன்பதிவில்லா சிறப்பு பயணிகள் ரயில் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சாதாரண நாட்களிலேயே பக்தர்கள் வெள்ளத்தில் சிக்கித் தவிக்கும் திருச்செந்தூர் கோவிலுக்கு வைகாசி விசாகத்திற்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், கேரளம், கர்நாடகம் உள்ளிட்ட அண்டை மாநிலங்களில் இருந்தும் லட்சக்கணக்கானோர் வருவார்கள்.

இது தொடர்பாக தெற்கு ரயில்வே வெளியிட்ட அறிக்கையில்;

வைகாசி விசாகத்தையொட்டி திருச்செந்தூர் நெல்லை இடையே மே 30ல் முன்பதிவில்லா பயணிகள் சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளது. மே 30 இரவு 11.30 மணிக்கு நெல்லையில் இருந்து புறப்படும் ரயில் மே 31 நள்ளிரவு 12.40 மணிக்கு திருச்செந்தூர் சென்றடையும்.

மே 30ம் தேதி இரவு 9 மணிக்கு திருச்செந்தூரில் இருந்து புறப்படும் ரயில் அதே நாள் இரவு 10.30 மணிக்கு நெல்லை சென்றடையும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வைகாசி விசாகத்தையொட்டி சிறப்பு ரயில் விடப்பட்டுள்ளதால் பக்தர்கள் சிரமமின்றி வழிபாடு செய்துவிட்டு சொந்த ஊர்களுக்கு திரும்புவர்.



■ தென்காசி மாவட்டம், செந்திலாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியில் "மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027" பணிகள் மேற்கொள்வது தொடர்பாக பயிற்சி வகுப்பினை முதன்மை மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல்கிஷோர் துவங்கி வைத்தனர்.

# த.வெ.க., அரசின் அறிவிப்பு விவசாயிகள் சுமையை குறைக்காது: இந்திய கம்யூனிஸ்ட்

சென்னை, மே.27-



'தவெக அரசின் அறிவிப்பு விவசாயிகள் சுமையை குறைக்காது. விவசாயிகள் பயிர்க்கடன் தள்ளுபடி ஏமாற்றம் அளிக்கிறது. தேர்தல் வாக்குறுதிப்படி விவசாயிகளின் பயிர்க்கடன் முற்றிலும் தள்ளுபடி செய்து மறுஉத்தரவு வழங்க வேண்டும்'என இந்திய கம்யூனிஸ்ட் தெரிவித்துள்ளது.

# "குதிரை பேர அரசியலை யார் நியாயப்படுத்தினாலும் அது தவறானது" காங். எம்.பி ஜோதிமணி கருத்து



சென்னை, மே.27-

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி குதிரை பேரத்தை ஆதரிக்கும், தமிழகத்துக்கு வெளியே அதை எதிர்க்கும் என்கிற இரட்டை நிலைப்பாட்டை ஒருபோதும் எடுக்கமுடியாது. குதிரைபேர அரசியலை காங்கிரஸ் கட்சியில் இருந்து யார் நியாயப்படுத்தினாலும் அது தவறானது என காங்கிரஸ் கட்சியின் மக்களவை உறுப்பினர் ஜோதிமணி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், தவெக உடன் காங்கிரஸ் கட்சி கூட்டணியில் உள்ளது. ஆட்சியில் பங்கெடுத்திருக்கிறது. இந்தத் தேர்தலில் மக்கள் தவெக தலைவர் ஜோசப் விஜய்யை முதலமைச்சராக்கியுள்ளார்கள். அவர் ஒரு சிறப்பான அரசாங்கத்தை தரவேண்டும் என்று விரும்புகிறார்கள். அவரும் அதைப் புரிந்துகொண்டு செயல்படுகிறார் என்பதற்கான முகாந்திரங்கள் தெளிவாகத் தெரிகிறது.

தமிழக மக்களுக்கு ஒரு சிறப்பான ஆட்சியைத் தருவதற்கு ஒரு கூட்டணி கட்சியாக நிச்சயம் நாம் அவருக்குத் துணை நிற்போம். ஆனால் அதற்காக தவெக தேர்ந்தெடுக்கும் அனைத்து வழிமுறைகளையும் காங்கிரஸ் கட்சியால் ஆதரிக்க முடியாது. அந்த வழிமுறைகள் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதாக இருக்கவேண்டும். பலவீனப்படுத்துவதாக இருக்கக் கூடாது. இம்மாதிரியான சூழலில் மாற்றுக் கருத்துகள் நமக்கு இருக்குமேயானால் அதைத் தயங்காமல் வெளிப்படுத்துவதுதான் தார்மீக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் சரியானது. தோழமை சுட்டுதல் என்று தமிழ் இலக்கியம் அதை அழகாகச் சொல்கிறது.

குதிரைபேர அரசியலை காங்கிரஸ் கட்சியில் இருந்து யார் நியாயப்படுத்தினாலும் அது தவறானது. இந்தியாவில் ஜனநாயகத்தை, காங்கிரஸ் கட்சியைப் பலவீனப்படுத்த பாஜக முதலில் கையில் எடுத்த ஆயுதம் குதிரை பேரம். மக்கள் காங்கிரஸ் கட்சியை ஆட்சி செய்ய தேர்ந்தெடுத்த பல்வேறு மாநிலங்களில், பாஜக மக்கள் தீர்ப்பிற்கு எதிராக, குதிரை பேரத்தைப் பயன்படுத்தி காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைக்க முடியாமலும், அமைத்தாலும் ஆட்சியில் தொடர்ந்து நீடிக்க முடியாமலும் தடுத்து வருகிறது.

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி குதிரை பேரத்தை ஆதரிக்கும், தமிழகத்துக்கு வெளியே எதிர்க்கும் என்கிற இரட்டை நிலைப்பாட்டை காங்கிரஸ் கட்சி ஒருபோதும் எடுக்கமுடியாது. ஜனநாயகத்தை பலவீனப்படுத்தும் ஒரு சக்தியாக காங்கிரஸ் கட்சி செயல்பாடுமேயானால் அது காந்திக்கும்,நேருவுக்கும், கொண்ட கொள்கைக்கும் செய்கிற வரலாற்றுத் துரோகமாக மாறிவிடும்.

தலைவர் ராகுல் காந்தி கொள்கைக்காக சமரசமற்றுப் போராடி வருகிற சூழலில் அந்தப் போராட்டத்தை பலவீனப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் அதை ஏற்கமுடியாது எனத் தெரிவித்துள்ளார்.

# "அ.தி.மு.க., எம்.எல்.ஏ.க்களை இணைத்துக் கொள்வது த.வெ.க.,வின் நம்பகத்தன்மை பாதிக்கும்" திருமாவளவன்



கோவை, மே.27-

"யார் எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்துவிட்டு வந்தாலும், அவர்களை கட்சியில் இணைத்துக் கொள்வது என்பது தவெகவின் நம்பகத்தன்மை பாதிக்க செய்யும். எனவே தவெக தலைமை இதற்கு ஊக்கமளிக்க கூடாது" என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்தார்.

கோவையில் செய்தியாளர் களிடம் திருமாவளவன் கூறும்போது, "குன்னத்தில் நடைபெற்ற சம்பவம் மிகுந்த கவலையளிக்கிறது, வேதனையளிக்கிறது. சமூக ஊடகங்களில் வரும் அவதூறுகளுக்கு எதிர்வினை ஆற்ற வேண்டாம் என விசிகவினரை கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்ற ஆர்ப்பாட்டம் நடைபெறுவதை கேள்விபட்டு, அதனை தவிர்க்க வேண்டுமென கேட்டுக்கொண்டேன்.

மாவட்ட முன்னணி பொறுப்பாளர்கள், ஆர்ப்பாட்டம் இல்லை என்பதை அறிந்து தவிர்த்துவிட்டார்கள். ஆனால், தகவல் தெரியாதவர்கள் அங்கே கூடியிருக்கிறார்கள். திமுகவை சார்ந்தவர்களும் அங்கே கூடியுள்ளார்கள். இதனால் அங்கே விரும்பத்தகாத நிகழ்வுகள் நடந்துள்ளன. இனி அவ்வாறு நடக்க இயக்க தோழர்கள் இடம் கொடுக்க கூடாது.

அதிமுக எம்எல்ஏக்கள் விலகி தவெகவில் இணைவதை ஆரோக்கியமான அரசியலாக கருதவில்லை. குடியரசுத் தலைவர் ஆட்சி வரக் கூடாது என எங்கள் ஆதரவை வழங்கினோம். தவெகவின் அழைப்பை ஏற்று அமைச்சரவையிலும் இடம்பெற்றுள்ளோம். எந்த சூழலிலும் உங்கள் ஆட்சி கவிழ இடம் கொடுக்க மாட்டோம். அந்த நம்பிக்கையோடு நீங்கள் ஆட்சியை திறம்பட செய்யவேண்டும். இதுபோன்ற விமர்சனங்களுக்கு இடம் கொடுக்காத வகையில் தவெக தலைமை செயல்பட வேண்டும் என்பது எங்கள் விருப்பம்.

அதிமுக இதுபோன்ற நெருக்கடியை சந்திக்கும் என தேர்தலுக்கு முன்பே சொல்லியிருந்தேன். பாஜக கூட்டணியில் இருந்ததால் தான் அதிமுக ஆதரவை பெறுவதில் தவெகவுக்கு நெருடல் இருந்ததாக அக்கட்சி தலைவர்கள் கூறியிருந்தனர். பாஜக கூட்டணி இல்லாமல் அதிமுக இருந்திருந்தால், தவெக அவர்களின் ஆதரவை நாடியிருக்கும். எனவேதான் அதிமுக இந்த நெருக்கடி நிலையை சந்திக்கிறது. யார் எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்துவிட்டு வந்தாலும், அவர்களை கட்சியில் இணைத்துக்கொள்வது என்பது தவெகவின் நம்பகத்தன்மை பாதிக்க செய்யும். எனவே தவெக தலைமை இதற்கு ஊக்கமளிக்க கூடாது. தமிழக அரசியலில் தலித்களுக்கு அதிகம் இடம் கொடுத்திருப்பது இதுவே முதன் முறை. அந்த சமூகத்துக்கு அங்கீகாரம் அளித்திருப்பது மகிழ்ச்சி" எனத் தெரிவித்துள்ளார்.

# வாசுதேவநல்லூர் தொகுதி மக்களுக்கு நேரில் நன்றி கூறிய எம்.எல்.ஏ ராஜா ஈஸ்வரன்!

வாசுதேவநல்லூர். மே,27-

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் 'உதயசூரியன்' சின்னத்தில் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற எம்.எல்.ஏ ராஜா ஈஸ்வரன், தொகுதி மக்களுக்கு நேரில் சென்று தீவிர நன்றி அறிவிப்புப் பயணம் மேற்கொண்டு வருகிறார்.



அதன் ஒரு பகுதியாக வாசுதேவநல்லூர் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட உள்ளார், தளவாய்புரம், சரவணாபுரம், சண்முக நாதபுரம், இராமநாதபுரம், திருமலாபுரம், வேலாயுதபுரம், மேட்டுபட்டி, கோடாங்குபட்டி, கூடலூர் பாண்டியன் நகர், ஆகிய பகுதிகளில் தீவிர சுற்றுப்பயணம் செய்து பொதுமக்களை நேரில் சந்தித்து நன்றி கூறினார்.

பங்கேற்ற முக்கிய நிர்வாகிகள் (அனைவர் பெயர்களும்):

இந்நிகழ்வில் பொன் முத்தையா பாண்டியன் (வடக்கு ஒன்றியச் செயலாளர்), டாக்டர் செண்பக விநாயகம் (மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர்), மனோகரன் (மாவட்டத் துணைச் செயலாளர்), பிச்சையா (மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர்), உள்ளார் ரமேஷ், ஜமீன் விக்னேஷ் ராஜா, ராஜராஜன் (சுற்றுச்சூழல் அணி அமைப் பாளர்), ஏ.ஆர். அப்பா குட்டி அருணாச்சலம் (புளியங்குடி மேற்கு நகர அவைத் தலைவர்), மணிகண்டன் (மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்) மற்றும் விஜயகுமார் (கிளைச் செயலாளர்) உட்பட திமுக மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டு சிறப்பான வரவேற்பு அளித்தனர்.



■ சேலம் மாநகராட்சியில் குடிநீர் விநியோக முறையைத் தனியார்மயமாக்கும் திட்டத்திற்குக் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இத்திட்டத்தைக் கண்டித்து, சேலம் மாநகராட்சி 4வது கோட்ட மாமன்ற உறுப்பினர் இமயவர்மன், மாநகராட்சி மேயர் ஏ.ராமச்சந்திரன் நேரில் சந்தித்து பொதுமக்களின் அத்தியாவசியத் தேவையான குடிநீர் விநியோகத்தைத் தனியார்மயமாக்கும் முயற்சியை மாநகராட்சி உடனடியாகக் கைவிட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். மேலும், நடைபெற உள்ள சேலம் மாநகராட்சி மாமன்றக் கூட்டத்தொடரில், இந்த குடிநீர் தனியார்மயப் பிரச்சினை குறித்துத் தான் வலுவாகக் குரல் எழுப்பப் போவதாகவும் மாமன்ற உறுப்பினர் இமயவர்மன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்



■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக, சங்கரன்கோவில் நகரத் தலைவர் UBV உதயகுமார் ஆலோசனைப்படி, நகர செயலாளர் மனோஜ்குமார் தலைமையில், 12 வது வார்டு 29 வது தனது சொந்த பூத்தில் 10th மற்றும் 12ம் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவி பெட்டகம், இல்லம் தேடி சென்று பரிசுகள் வழங்கப்பட்டது. உடன் இருந்த சொந்த பூத்தின் அனைத்து சமுதாய இளைஞர் பட்டாளங்களும் மகிழ்ச்சியுடன் ஆதரவு அளித்தனர்.



# சாதனை படைத்த அரசுப் பள்ளி மாணவர்களைக் கௌரவித்த அவிநாசி DYFI கமிட்டி

அவிநாசி, மே.27-

பூண்டி நகராட்சிக் குட்பட்ட இராக்கிய பாளையம் அரசுப் பள்ளியில், பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பிடித்துச் சாதனை படைத்த 6 மாணவ, மாணவிகளுக்கு, இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் (DYFI) அவிநாசி கமிட்டி சார்பாகப் பாராட்டு விழா நடத்தப்பட்டது. சாதனைக் குழந்தைகளுக்குப் பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசுகள் மற்றும் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் DYFI ஒன்றியத் தலைவர் சந்தோஷ் குமார், ஒன்றியச் செயலாளர் வடிவேல், கிளைச் செயலாளர் தினேஷ், ஒன்றியக்குழு உறுப்பினர் பாலசுப்பிரமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும் நகராட்சி கவுன்சிலர்கள் தேவராஜ், சுப்பிரமணி, இராக்கியபாளையம் கிளைச் செயலாளர் ராஜேந்திரன், முக்கியப் பிரமுகர்களான அருணாச்சலம், அவிநாசியப்பன் மற்றும் 'சிம்மாசனம்' திரைப்பட இயக்குநர் ஈஸ்வரன் ஆகியோர் நேரில் கலந்துகொண்டு மாணவ, மாணவிகளுக்குத் தங்களது வாழ்த்துகளுடன் கல்விக்கான உதவிப் பெட்டகங்களையும் வழங்கிச் சிறப்பித்தனர்.

# இஸ்லாமிய பெருமக்களுக்குத் தியாகத் திருநாள் வாழ்த்து!

## மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சித் தலைவர் காயல் அப்பாஸ்

தூத்துக்குடி, மே.27-

இஸ்லாமியப் பெருமக்களுக்குப் புனித ஹஜ் பெருநாள் (தியாகத் திருநாள்) நல்வாழ்த்துகளை மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் மாநிலத் தலைவர் காயல் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "சுமார் 4,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இப்ராஹீம் நபி, இறைவனின் கட்டளைக்கு இணங்கித் தனது ஒரே மகன் இஸ்மாயீலை பலியிடத் துணிந்த உன்னத தியாகத்தை நினைவு கூரும் நாளே இந்தத் தியாகத் திருநாள் ஆகும். இப்ராஹீம் நபியின் அசைக்க முடியாத இறைநம்பிக்கையையும், தியாகத்தையும் போற்றும் பொருட்டு, இறைவன் ஆட்டைப் பலியிடக் கட்டளையிட்டார். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சம்பவத்தின் அடிப்படையிலேயே இஸ்லாமியர்கள் தங்கள் இல்லங்களில் ஆடுகளைப் பலியிட்டு, ஏழை எளியவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்து இப்பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள்" எனக் குறிப்பிட்டுத் தனது வாழ்த்துகளைப் பதிவு செய்துள்ளார்.



சக்கர வியூகம் வாய்ஸ்: 'தியாகமும், ஈகையும்' மனிதகுலத்தின் ஆகச்சிறந்த பண்புகள் என்பதை உலகிற்கு உணர்த்தும் புனித நாளே ஹஜ் பெருநாள்! மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சித் தலைவர் காயல் அப்பாஸ் அவர்கள் குறிப்பிட்டுள்ளபடி, இந்தத் தியாகத் திருநாளில் மனிதநேயமும், சகிப்புத்தன்மையும், பிறருக்குக் கொடுத்து உதவும் தாராள குணமும் அனைவர் மனங்களிலும் தழைத்தோங்க சக்கரவியூகம் நாளிதழ் சார்பாக நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்!.



■ புதுச்சேரி நகரப் பகுதியில் தொடர்ந்து நடைபெற்று வந்த மோட்டார் சைக்கிள் திருட்டுகளைத் தடுக்கும் பொருட்டு, பெரியகடை போலீஸார் தீவிரம் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் சுற்றிய இருவரைப் பிடித்து போலீஸார் விசாரணையில், புதுச்சேரி நகரப் பகுதிகளில் தொடர் மோட்டார் சைக்கிள் திருட்டில் ஈடுபட்டது அம்பலமானது. இருவரையும் கைது செய்த பெரியகடை போலீஸார், அவர்களிடமிருந்து சுமார் 6 லட்சம் ரூபாய் மதிப்பிலான 6 திருட்டு மோட்டார் சைக்கிள்களைப் பறிமுதல் செய்தனர். இந்தத் துரித நடவடிக்கையில் ஈடுபட்ட போலீஸ் குழுவினரை உயர் அதிகாரிகள் வெகுவாகப் பாராட்டினர்.



# டாஸ்மாக் விற்பனையாளர்கள் மற்றும் ஊழியர்கள் சார்பில் கவன ஈர்ப்பு வேலைநிறுத்தப் போராட்டம்

சேலம், மே.27-

சேலம் மாவட்டம் மல்லூர் சந்தியூர் பகுதியில் உள்ள தமிழ்நாடு மாநில வாணிபக் கழக (டாஸ்மாக்) கடை முன்பாக, தமிழ்நாடு ஒருங்கிணைந்த டாஸ்மாக் விற்பனையாளர்கள் மற்றும் ஊழியர்கள் சார்பில் கவன ஈர்ப்பு வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெற்றது.

டாஸ்மாக் கடைகளில் காலி மதுபாட்டில்களைத் திரும்பப் பெறும் நடைமுறையை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். கடந்த 22 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரிந்து வரும் ஊழியர்களுக்குக் காலமுறை ஊதியம் (வழக்கமான சம்பள முறை) வழங்க வேண்டும். நிர்வாகக் காரணங்களால் மூடப்பட்ட கடைகளில் பணியாற்றிய ஊழியர்களின் கல்வித் தகுதிக்கு ஏற்ப, மாற்றுப் பணிகள் வழங்க அரசு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி ஊழியர்கள் முழக்கங்களை எழுப்பியதோடு, வேலை நிறுத்தத்திலும் ஈடுபட்டனர்.






■ திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் மண்டலம்3, வார்டு59க்குட்பட்ட கோவில் வழி, காளிபாளையம் பகுதியில் நேரில் கள ஆய்வு மேற்கொண்டார். அங்குள்ள மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியின் (OHD) செயல்பாடுகள் மற்றும் அதன் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் விநியோகம் குறித்து விரிவாகப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது, 59வது வார்டு மாமன்ற உறுப்பினர் சாமிநாதன், உதவி செயற்பொறியாளர் (பொ) ராம்மோகன், சுகாதார ஆய்வாளர் தங்கமுத்து, குழாய் ஆய்வாளர் மூர்த்தி, இளநிலை பொறியாளர் சண்முக வடிவேல் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளைத் தடுத்திடுக! தென்காசியில் ஆர்ப்பாட்டம்

தென்காசி, மே.27-

தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பாக, தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கத்தின் சார்பில், மாற்றுத்திறனாளிகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளைத் தடுத்திடக் கோரி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சிவகுமார் தலைமை வகித்தார். நிர்வாகிகள் தங்கம், இப்ராஹிம், முத்துக்குமாரசாமி, அன்வர் அலி, மாசானம் ஆகியோர் முன்னி லை வகித்தனர்.




மாநிலத் துணைத் தலைவர் முருகேசன் விளக்க உரையாற்றுகையில், "புதுக் கோட்டை மாவட்டம் கறம்பக் குடி ஒன்றியத்தில் செவித்திறன் மாற்றுத் திறனாளி பெண் பாலியல் கும்பலால் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் கவலையளிக்கிறது. இதில் இருவர் கைது செய்யப் பட்டுள்ள நிலையில், பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு நிவாரணமாக ₹20 லட்சமும், அரசு வேலையும் வழங்க வேண்டும். பல்வேறு மாவட்ட ங்களில் பாதிக்கப் பட்டுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு உரிய நீதி கிடைப்பதோடு, குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்" என வலியுறுத்தினார்.

இவ்வர்ப்பாட்டத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்கள் கந்தசாமி, சங்கரலிங்கம், தங்கம், அமராவதி, பூமாரி, முருகன், சுப்பையா, ஹஜ்மீர் காஜா மைதீன், பூலாங்குளம் முருகன், சுமன் உள்ளிட்ட அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் அமைப்பின் தோழர்கள் பலர் திரளாகக் கலந்துகொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

# அ.தி.மு.க., எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்த இசக்கி சுப்பையா த.வெ.க.,வில் ஐக்கியம்

சென்னை, மே.27-

அதிமுக எம்எல்ஏவாக இருந்த இசக்கி சுப்பையா இன்று காலையில் தனது பதவியை ராஜினாமா செய்த நிலையில், அமைச்சர்கள் செங்கோட்டையன், ஆனந்த் முன்னிலையில் தவெகவில் இணைந்தார்.

அம்பாசமுத்திரம் தொகுதி அதிமுக எம்எல்ஏவாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் இசக்கி சுப்பையா. சட்டப் பேரவைத் தேர்தலில் தவெக தனிப்பெரும் கட்சியாக உருவான நிலையில், பழனிசாமிக்கு எதிராக எஸ்.பி.வேலுமணி சி.வி.சண்முகம் தலைமையில் 25 அதிமுக எம்எல்ஏக்கள் தவெக அரசுக்கு ஆதரவளித்தனர்.



இதில் இசக்கி சுப்பையாவும் வேலுமணி அணிக்கு ஆதரவளித்தார்.

நேற்று அதிமுக எம்எல்ஏக்களான மரகதம் குமரவேல், ஜெயக்குமார், சத்யபாமா ஆகியோர் தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தவெகவில் இணைந்தனர். இந்த நிலையில் இன்று காலையில் இசக்கி சுப்பையாவும் தனது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார்.

இதனையடுத்து, பனையூரில் உள்ள அலுவலகத்தில் அமைச்சர்கள் செங்கோட்டையன், ஆனந்த் முன்னிலையில் இசக்கி சுப்பையா தவெகவில் இணைந்தார்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், “ 2021 முதல் எதிர்க்கட்சி எம்எல்ஏவாக இருந்தேன். அப்போது பெரிய அளவில் என்னால் நலத்திட்டங்களை கொண்டு வரமுடியவில்லை. இப்போது என் அம்பாசமுத்திரம் தொகுதிக்கு பல நலத்திட்டங்களை கொண்டு வர வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் தவெகவில் இணைந்துள்ளேன்” என்றார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000